රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව
அரசாங்க தகவல் திணைக்களம்
Department of Government Information

**2026.08.03 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்**

**01. பாதுகாப்பான, சீரான மற்றும் ஒழுங்குமுறையான புலம்பெயர்வுக்கான உலகளாவிய உடன்படிக்கையின் பிரகாரம் 2026 – 2028 ஆண்டு காலப்பகுதிக்கான இலங்கையின் தேசிய செயற்பாட்டுத் திட்டம்**

‘பாதுகாப்பான, சீரான மற்றும் ஒழுங்குமுறையான புலம்பெயர்வுக்கான உலகளாவிய உடன்படிக்கை The Global Compact for Safe, Orderly and Regular Migration) என்பது சர்வதேச புலம்பெயர்வில் அனைத்துப் பரிமாணங்களையும் முழுமையான விதத்தில் அமைந்த சர்வதேச ரீதியாகக் கலந்துரையாடப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது செயற்கருவியாகும். குறித்த உடன்படிக்கை, இலங்கை அரசு 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தொடரில் ஏற்றுக் கொண்டுள்ளது. இலங்கைத் தொழிலாளர்களுக்கு வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கு மேலதிகமாக, புலம்பெயர் செயன்முறையில் திறன் விருத்தியை அதிகரிப்பதன் மூலம் வெளிநாட்டு செலாவணியை ஈட்டுவதற்கு பங்களித்தல் போன்ற நேர்மயமான விளைவுகளை மேலும் அதிகரிப்பதற்கு பாதுகாப்பான, சீரான மற்றும் ஒழுங்குமுறையான புலம்பெயர்வுக்கான உலகளாவிய உடன்படிக்கை மூலம் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், மனித வியாபாரம் மற்றும் சட்ட விரோதமாக ஆட்களை ஏற்றிச் செல்லல் போன்ற புலம்பெயர்வுடன் தொடர்புடைய முறைகேடுகளைத் தடுப்பதற்கும் ஏதுவாக அமையும். குறித்த உடன்படிக்கையை இலங்கையில் அமுல்படுத்துவதற்கு அப்போதைய வெளிவிவகார அமைச்சு மற்றும் தொழில் அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் அமைச்சின் இணை ஏற்பாட்டின் கீழ் 2021 ஆம் ஆண்டில் செயற்பாட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவால் 2022 ஆம் ஆண்டில் இலங்கையில் தேசிய செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், எமது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக குறித்த செயற்பாட்டுத் திட்டத்தை அமுல்படுத்த முடியாமல் போனதுடன், இக்குழு 2025 ஆம் ஆண்டில் மீண்டும் மீள்கட்டமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவால் அனைத்துத் தரப்பினர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டு 2026 – 2028 ஆண்டு காலப்பகுதிக்கான பாதுகாப்பான, சீரான மற்றும் ஒழுங்குமுறையான புலம்பெயர்வுக்கான உலகளாவிய உடன்படிக்கையை அமுல்படுத்துவதற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. ‘தித்வா’ புயல் அனர்த்தத்தால் இடம்பெயர்ந்த குடும்பங்களை மீண்டும் குடியமர்த்துவதற்காக காணிகளைக் கையுதிர்க்கும் செயன்முறை**

இலங்கைக்குயில் ‘தித்வா’ புயல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களில் முழுமையாக வீடுகள் சேதமடைந்த குடும்பங்களுக்கு மற்றும் மண்சரிவால் அதிக ஆபத்துக்களுக்கு உள்ளாகியுள்ள குடும்பங்களை மீளக்குடியமர்த்தும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்குத் தேவையான காணிகளை அரச காணிகளிலிலிருந்து மாத்திரம் வழங்க முடியாதிருப்பதால், கீழ்க்காணும் வகையில் படிமுறைகளை மேற்கொண்டு இப்பணிக்குத் தேவையான காணிகளைப் பெற்றுக்கொள்வதற்காக கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைனக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது :



163, කිරුළපන මාවත, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
දු තො T - (+94 11) 2515759
ෆැ பெ F - (+94 11) 2514753
ඊ மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

- தற்போது அளிப்புப் பத்திரங்கள் மூலம் வேறு நபர்களுக்கு வழங்கியுள்ள காணிகளை மீள்குடியமர்த்துவதற்குப் பயன்படுத்துவதற்காக அடையாளங் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில், காணியின் அபிவிருத்திப் பெறுமதியை பிரதேச செயலாளர் ஊடாக அளிப்புப்பத்திர உரிமையாளருக்கு செலுத்தி சமமான வருமானத்தைக் கொண்டுள்ள நபருக்கு குறித்த காணியை முறைசார்ந்த வகையில் ஒப்படைப்பதற்கு அனுமதியளித்தல்
- மீளக்குடிமர்த்தும் பணிக்கு நன்கொடையாளர்களால் அரசுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ள தனியார் காணிகள், அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 'அன்பளிப்பு உறுதி' மூலம் முதலாவதாக அரசுக்கு மாற்றிப் பெற்றுக்கொண்ட பின்னர், 1950 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க காணிக் கையகப்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் குறித்த நபர்களுக்கு நட்டஈடு கைவிடல் கூற்றைப் பெற்றுக்கொண்டு அரச உரித்தைப் பதிவு செய்து தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மீளக்குடிமர்த்துவதற்கு தங்களிடம் பொருத்தமான காணிகள் இல்லாதவர்களுக்கு மேற்குறிப்பிட்ட முறைகளின் பிரகாரம் காணிகளை வழற்குவதற்கு வாய்ப்புக்கள் இல்லாதபோது உயர்ந்தபட்சம் 10 பேர்ச்சர்ஸ்கள், அரச காணியிலோ அல்லது அரசுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியிலோ காணித்துண்டொன்றை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னர், 1947 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் கீழ் காணி உரிமையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

### 03. இலங்கை ஜேர்மன் தொழிநுட்ப பயிலுநர் நிறுவகத்தின் மூலம் மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்தி தொடர்பான பயிற்சி நிலையமொன்றை அமைத்தல்

இலங்கையில் மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்தி துறையில் நிலவுகின்ற பயிற்சித் தேவைகளைக் கருத்தில் கொண்டு, மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்தி தொடர்பான புதிய பயிற்சி நிலையமொன்றை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக இலங்கை ஜேர்மன் தொழிநுட்ப பயிலுநர் நிறுவகம் மற்றும் இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகாரசபைக்கும் இடையில் 2025.02.10 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடப்பட்டுள்ளது. இலங்கை ஜேர்மன் தொழிநுட்ப பயிலுநர் நிறுவகத்துடன் இணைந்த ஒரு கிளையாக இப்புதிய பயிற்சி நிலையம் இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான வலயத்தில் மயுரபுர பிரிவில் 3.11 ஹெக்ரெயார் காணியில் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. கிரிஇப்பன்வெவ மிதக்கும் சூரிய மின்கல மின்னுற்பத்தி நிலையம் மற்றும் இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகாரசபையின் அம்பாந்தோட்டை பயிற்சி நிலையத்திற்கு அருகில் இப்பயிற்சி நிலையத்தை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளமையால், மாணவர்களுக்கு நேரடியான செய்முறைப் பயிற்சிகளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களும் கிடைக்கும். உத்தேச புதிய பயிற்சி நிலையத்துடன் ஏனைய ஏற்புடைய நிறுவனங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்தி தொடர்பான பயிற்சி மையமொன்றை (Training Hub) செயற்படுத்துவதே இக்கருத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இப்பயிற்சி மையத்தின் மூலம் வலுசசக்தி வினைத்திறன், இலத்திரனியல் மற்றும் இயந்திரோபகரணப் பொறியியல் தொழிநுட்பத்தைப் போலவே சூரிய மின்கலம், காற்றாலை மின்னுற்பத்தி, நீர் மின்னுற்பத்தி மற்றும் உயிர்ம வாயு போன்ற மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்தி துறைகளை உள்ளடக்கியவாறு விடயதான அறிவு மற்றும் செய்முறைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் திறமையான தொழிநுட்ப தொழில் வல்லுநர்களை உருவாக்குவதற்கு இயலுமை கிட்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, 398 மில்லியன் ரூபாய்கள் செலவு மதிப்பீட்டின் கீழ் உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தி குறித்த மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்தி தொடர்பான பயிற்சி நிலையத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. சேனாநாயக்க சமுத்திரத்தின் துரிசுக் கோபுரம், துரிசு உருளை மற்றும் ஏனைய பாகங்களை மீள்நிர்மாணிக்கும் கருத்திட்டம்**

சேனாநாயக்க சமுத்திரத்தின் துரிசுக் கோபுரத்தை மீள்கட்டமைப்பதற்கு மற்றும் துரித உருளையை மீள் நிர்மாணித்தல் அல்லது திருத்தும் பணிகளுக்கு சர்வதேச பெறுகை முறையைக் கடைப்பிடித்து ஒப்பந்தக்காரர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், அதற்குத் தேவையான நிதியொதுக்கீடுகளை மேற்கொள்வதற்கும் 2025.09.03 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பின்னர், குறித்த மீள்கட்டமைப்புப் பணியின் சிக்கலானதன்மை மற்றும் அதற்குரிய விபரக்குறிப்புக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான விசேட தொழிநுட்ப அறிவைக் கருத்தில் கொண்டு, இப்பெறுகையை இரண்டு கட்டங்களாக மேற்கொள்வது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது. கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைனக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது :

- கட்டம் - 1 - சேனாநாயக்க சமுத்திரத்தின் துரிசுக் கோபுரம், துரிசு உருளை மற்றும் ஏனைய பாகங்களை மீள்கட்டமைத்தல் அல்லது மீள்நிர்மாணிப்பதற்காக ஏற்புடைய கருத்தாக்கத் திட்டம் மற்றும் விலைமனுக்களைக் கோருவதற்காக ஆவணங்களைத் தயாரிக்கும் போது சர்வதேச போட்டி விலைமனுக்கோரல் முறையைக் கடைப்பிடித்து பண்புசார் தேர்வின் அடிப்படையிலான (Quality Based Selection) பொருத்தமான ஆலோசனை நிறுவனமொன்றைத் தேர்ந்தெடுத்தல்.
- கட்டம் - 2 - இன் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் ஆலோசனை நிறுவனத்தால் தயாரிக்கப்படும் ஆவணங்களின் அடிப்படையில், சர்வதேச போட்டி விலைமனுக்கோரல் முறையின் கீழ் நிர்மாணப் பணிகளுக்குப் பொருத்தமான ஒப்பந்தக்கார நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்தல்

**05. நகரப்புறப் பிரதேசங்களில் பயணிகள் போக்குவரத்து சேவைகளுக்கு தாழ் மிதிபலகையைக் கொண்டமைந்த 50 சொகுசு பேரூந்துகளை பெறுகை செய்தல்**

பொதுப் போக்குவரத்து முறைமையை நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தாழ்மிதிபலகையைக் கொண்ட 100 சொகுசு பேரூந்துகள் கொள்வனவு செய்யப்பட்ட பெறுகையின் கீழ் குறித்த விநியோகத்தரால் எமது நாட்டுக்கு இப்பேரூந்துகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. பயணிகளின் கோரிக்கைகள் அதிகரித்திருத்தல், பிரதான பிராந்திய போக்குவரத்து மற்றும் சுற்றுலா மையமாக மூலோபாய முக்கியத்துவம் மற்றும் கொழும்பு பெருநகர வலயத்துக்கு வெளியே நவீன பொதுப் போக்குவரத்துச் சேவைகளை விரிவாக்கம் செய்யும் அரசின் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு மெட்ரோ பேரூந்துக் கருத்திட்டத்தின் முதலாவது கட்டத்தில் கண்டி, காலி மற்றும் யாழ்ப்பாண நகரங்களில் அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்காக மெட்ரோ பேரூந்து சேவைக் குழாமில் பேரூந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, 2026.03.06 ஆம் திகதி 100 பேரூந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ், அரச பெறுகை வழிகாட்டியைக் கடைப்பிடித்து 50% சதவீதம் மீண்டும் கொள்வனவுக் கட்டளையாக மேலும் 50 தாழ் மிதிபலகை சொகுகு பேரூந்துகளைப் பெறுகை செய்வதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

06. **'தித்வா' புயல் அனர்த்தத்தால் சேதமடைந்துள்ள மற்றும் அனர்த்தத்திற்குள்ளாகியுள்ள மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மீள்கட்டமைத்தல்**

'தித்வா' புயல் அனர்த்தத்தால் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்களின் உட்கட்டமைப்பு வசதிகள், நீர் உயிரின வளர்ப்பு வசதிகள், மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களுக்கு

குறிப்பிடத்தக்களவு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இச்சேதங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள தொழிநுட்ப மதிப்பீடுகளுக்கமைய, தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை, மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடற்றொழிலுடன் தொடர்புடைய விடயதானத்தின் கீழ் ஒட்டுமொத்தமாக ஏற்பட்டுள்ள சேதங்கள் 9,496.59 மில்லியன் ரூபாய்களாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலைமையைக் கருத்தில் கொண்டு, சேதமடைந்துள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மீள்கட்டமைத்தல் மற்றும் சேவைகளை இயல்பு நிலைமைக்கு கொண்டு வருவதற்காக குறித்த நிறுவனங்கள் மூலம் 8,322.96 ரூபாயகள் பெறுமதியான 18 கருத்திட்டங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. அதற்கமைய, கீழ்க்காணும் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு கடற்றொழில், நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது :

- தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் 7,005.69 மில்லியன் ரூபாய்கள் மொத்த செலவு மதிப்பீட்டின் கீழ் 10 கருத்திட்டங்களை அமுல்படுத்தல்
- மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தால் 1,292.06 மில்லியன் ரூபாய்கள் மொத்தச் செலவில் 07 கருத்திட்டங்களை அமுல்படுத்தல்
- இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தால் 25.21 மில்லியன் ரூபாய்கள் மொத்தச் செலவில் ஒரு கருத்திட்டத்தை அமுல்படுத்தல்

### 07. 'சுகவாழ்வு நிலையம்' வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பொறியியல் ஆலோசனை நிறுவனத்தை நியமித்தல்

சுகாதார சேவை தேவைகளின் அடிப்படையில், தற்போதுள்ள ஆரம்ப சுகாதார சேவைகள் நிறுவனங்களை மேம்படுத்தல் மற்றும் குறைந்த வசதிகளுடன் சுடிய பிரதேசங்களில் புதிய சுகாதார நிலையங்களை நிர்மாணிப்பதற்கான 'சுகவாழ்வு நிலையம்' வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2026.06.01 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டம் கட்டம் கட்டமாக அமுல்படுத்தப்படுவதுடன், நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்படும் சிறியளவிலான கருத்திட்டங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. குறித்த வேலைத்திட்டத்தை திட்டமிடல், மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் விலைமனுக்கோரல் ஆவணங்களைத் தயாரித்தல், பெறுகை ஒத்துழைப்பு, ஒப்பந்த நிர்வாகம், கட்டுமானக் கண்காணிப்பு, செலுத்தல்களை அங்கீகரித்தல், தரத்தை அத்தாட்சிப்படுத்தல் மற்றும் குறைபாடுகளுக்கான பொறுப்புக்களுக்கான சேவைகளுக்கு பொறியியல் மதியுரை சேவைகள் அவசியமாகும். அதற்கமைய, சுகவாழ்வு நிலையங்கள் வேலைத்திட்டத்தின் மதியுரை சேவைகள் நிறுவனமாக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தை நியமிப்பதற்கு சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 08. 2011 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மோட்டார் வாகனங்கள் (அதிவேக நெடுஞ்சாலைகள்) ஒழுங்குவிதிகளைத் திருத்தம் செய்தல்

நாளாந்தம் அதிகரித்து வருகின்ற வீதி விபத்துக்களால் இடம்பெறுகின்ற உயிரிழப்புக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கும், காயங்களால் ஏற்படுகின்ற மோசமான நிலைமைகளைக் குறைப்பதற்கும் இயலுமாகும் வகையில் அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கின்ற வாகனங்களில் அனைத்து ஆசனங்களிலும் பயணிக்கின்றவர்களுக்கு பாதுகாப்பு ஆசனப்பட்டிகள் அணிந்திருப்பதைக் கட்டாயமாக்குவதற்கு, மோட்டார் வாகன சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டுள்ளன. குறித்த வாகனத் தயாரிப்பாளர்கள் இருக்கைப் பட்டிகளைப் பொருத்தாத

வாகனங்களுக்கு இருக்கைப் பட்டிகளைச் சரியான வகையில் பொருத்துவதற்கு இயலுமாகும் வகையில் வழங்கப்பட்டுள்ள சலுகைக்காலம் 2026.06.19 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது. இச்சலுகைக்காலத்தை மேலும் 2026.09.19 ஆம் திகதி வரை 03 மாதங்களுக்கு நீடிக்குமாறு அந்தந்த தரப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கோரிக்கையைக் கருத்தில் கொண்டு, 2493/19 ஆம் இலக்க 2026.06.17 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2011 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மோட்டார் வாகனங்கள் (அதிவேக நெடுஞ்சாலைகள்) ஒழுங்குவிதி திருத்தம் செய்யப்பட்டுள்ளது. குறித்த திருத்தங்களுடன் கூடிய ஒழுங்குவிதியை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. 2026 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மோட்டார் வாகன (பரிசோதனை) ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

எமது நாட்டில் அண்மையில் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய மோசமான வகையிலான வீதி விபத்துக்கள் தொடர்பாக மோட்டார் வாகனங்கள் பிரிசோதனையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வாகனங்களின் இயைபான தொழிற்பாட்டில் இருக்கின்ற குறைபாடுகளே இவ்விபத்துக்களுக்கு காரணமெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதனால், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை அல்லது இலங்கை போக்குவரத்து சபையின் கீழ் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் பயணிகள் போக்குவரத்து சேவைகள் மற்றும் வாடகை அடிப்படையில் விசேட சுற்றுலா சேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களின் தகுதியை பரிசோதனை செய்கின்ற முறையொன்றை உருவாக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தி, (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2026 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மோட்டார் வாகன (பரிசோதனை) ஒழுங்குவிதி, 2489/22 ஆம் இலக்க 2026.05.19 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

ஓய்வூதிய உரித்தற்ற தனியார் மற்றும் பகுதியளவு அரச துறையில் பணிபுரிகின்ற ஊழியர்களின் சமூகப் பாதுகாப்புக்கான நிதியமொன்றைத் தாபிப்பதற்கு 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த சட்டம் தொடர்பாக பொதுவான நிர்வாக நடவடிக்கைகள் தொழில் ஆணையாளர் நாயகத்தின் கீழ் அமுல்படுத்தப்படுவதுடன், இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராக செயலாற்றி வருகின்றது. சமகாலச் சட்டம் அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்டாலும், தற்போதைய சமூக, பொருளாதார மற்றும் தொழிநுட்ப மாற்றங்களுக்கு இயைந்து இந்நிதியத்தின் உறுப்பினர்கள் முகங்கொடுகின்ற சிரமங்களைக் குறைத்து தரப்பண்பான மற்றும் வினைத்திறனான சேவைகளை வழங்குவதற்காக மேலும், குறித்த சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளது. அதற்காக. இலங்கை மத்திய வங்கியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளைக் கருத்தில் கொண்டு, தொழில் திணைக்களத்தால் ஆரம்ப வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த ஆரம்ப வரைபை அடிப்படையாகக் கொண்டு ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தை திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக தொழில் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 11. சிறுவர் உரிமைகள் சட்டத்தை வரைக்கம் செய்தல்

இலங்கையில் சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்களை உறுதிப்படுத்துவதற்காக தற்போது காணப்படுகின்ற சட்ட ஏற்பாடுகளுக்கு மேலதிகமான ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்படுகின்ற வகையில் சட்டமொன்றை இயற்ற வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, 'சிறுவர் உரிமைகள் தொடர்பான கூட்டிணைப்புச் சட்டம்' எனும் பெயரிலான சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக 2024.02.19 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு சட்டவரைஞரால் சட்டமூலத்தைத் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த சட்டமூலத்தைத் தயாரிக்கும் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு செல்வதற்கு சமகால அமைச்சரவையின் கொள்கை ரீதியான அங்கீகாரம் தேவையென சட்டவரைஞர் தெரிவித்துள்ளார். அத்துடன், தற்போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருக்கும் சட்டத்தின் பெயரான 'சிறுவர் உரிமைகள் தொடர்பான கூட்டிணைப்புச் சட்டம்' என்பதற்குப் பதிலாக 'சிறுவர் உரிமைகள் சட்டம் என திருத்தம் செய்வது பொருத்தமானதென கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன், உத்தேச சட்டத்தில் மேலும் உட்சேர்க்கப்பதற்கு அடையாளங் காணப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கி கருத்தாக்கப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இக்கருத்தாக்கப் பத்திரத்தின் அடிப்படையில், சிறுவர் உரிமைகள் சட்டமூலத்தை தயாரிக்கும் பணிகளைத் துரிதப்படுத்துமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 12. ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் கொள்கை அடிப்படைக் கடனைப் பெற்றுக்கொள்ளல்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிரந்தர பொது மூலதன வளங்கள் மூலம் 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கான கடன் உடன்படிக்கைக் கலந்துரையாடலை நடாத்துவதற்கு 2026.06.15 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கடன் தொகையைப் பெற்றுக் கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் வர்த்தக, முதலீடு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் உப வேலைத்திட்டமொன்றுக்குரிய கடன் கலந்துரையாடல் வெற்றிகரமாகப் பூர்த்தியடைந்துள்ளது. இக்கடன் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு சட்டமா அதிபர் அலவுலகம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய, அரச கடன் முகாமைத்துவ அலுவலகத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள்கடன் தொகையை பெற்றுக் கொள்வதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 13. ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கியால் நிதியளிக்கப்படும் கொழும்பு நகர மறுமலர்ச்சி கருத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் கருத்திட்டத்தை மீண்டும் அதன் நோக்கத்தை (Repurpose) மாற்றியமைத்தல்

'தித்வா' புயலால் ஏற்பட்ட கடும் மழைவீழ்ச்சி காரணமாக உயிரிழப்புக்கள், இடம்பெயர்வுகள், வாழ்வாதார அழிவுகள் போன்ற அரச மற்றும் தனியார் சொத்துக்களுக்கு பாரியளவ சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அதனால், தேசிய மீள்கட்டமைப்பு மற்றும் மறுசீரமைப்புக்கள் அதிக முன்னுரிகளாகத் தோன்றியுள்ளன. அதற்கமைய, தற்போதுள்ள தீர்மானம்மிக்க பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் புளரமைப்பு மற்றும் மீள்கட்டமைப்பு ஒத்துழைப்புக்களுக்கான நிதி வசதிகளை மீண்டும் அதன் நோக்கங்களை மாற்றியமைப்பதற்கும் மற்றும் மீள்கட்டமைப்பதற்கும் இலங்கை அரசின் அபிவிருத்திப் பங்காளர்களின் உடன்பாடு கிடைத்துள்ளது. அதன்கீழ், ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள்

முதலீட்டு வங்கியால் நிதியளிக்கப்படும் கொழும்பு நகர மறுமலர்ச்சி கருத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் கருத்திட்டத்தை மீண்டும் அதன் நோக்கத்தை மாற்றியமைத்து, இக்கருத்திட்டத்தை 'அவசர வீடமைப்பு மறுசீரமைப்பு கூறு' எனும் புதிய கூறொன்றை உருவாக்கி, 'தித்வா' புயல் அனர்த்தத்தால் புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் சேதமடைந்துள்ள வீடுகளைப் புனரமைப்பதற்கு 10.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியை ஒதுக்குவதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**14. சிறைச்சாலை நெரிசலுக்கு மாற்று வழிமுறையாக வீட்டுக் காவலில் தடுத்து வைத்தல்**

தடுப்புக் காவலில் வைத்தல்/சிறைப்படுத்தல் போன்றவற்று மாற்று வழிமுறையாக பொருத்தமான வழக்கு நடவடிக்கைகளில் சந்தேக நபர்கள் மற்றும் தவறாளர்கள் வீட்டுக்காவலில் வைப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்காக அப்போதைய அமைச்சரவையால் வழங்கப்பட்டுள்ள கொள்கை ரீதியான அங்கீகாரத்தின் பிரகாரம் சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு செயன்முறையை சட்டவரைஞர் ஆர்பித்துள்ளார். அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை மேலும் மீளாய்வு செய்வதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு 2025.06.23 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு மேலும் உட்சேர்க்கப்பட வேண்டிய ஏற்பாடுகள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன், குறித்த ஏற்பாடுகளை உட்சேர்த்து இச்சட்டமூலத்தைத் தயாரிக்கும் பணிகளைத் துரிதமாகப் பூர்த்தி செய்யுமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**15. நீதித்துறை சுயாதீனத்தை மேலும் பலப்படுத்துவதற்காக அரசியலமைப்பு மற்றும் நீதித்துறை சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

நீதித்துறையின் சுயாதீனத்தை மேலும் பலப்படுத்தும் நோக்கிலும் மற்றும் திரண்டு போயுள்ள வழக்குகளை வினைத்திறனாக முடிவுறுத்தும் நோக்கிலும் அரசியலமைப்பு மற்றும் நீதித்துறை சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு 2026.07.27 ஆம் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த அங்கீகாரத்தின் பிரகாரம் சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள இருப்பதிரண்டாவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலத்திற்கு மற்றும் நீதித்துறை (திருத்தச்) சட்டமூலத்திற்கு சட்டமா அதிபர் அவர்களின் அரசியலமைப்புடனான இணங்கியொழுகும் தன்மை பற்றிய ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள குறித்த திருத்தச் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**